**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.203/2024

Deposition of witness for PW3

| | | |
|---|---|---|
| Name | : | பிரபாகரன் |
| Father's Name | : | பத்மநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 01.08.2025.

முதல் விசாரணை:

நான் நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். புல எண்.196/1 என்பது 4 உட்பிரிவுகளாக செய்யப்பட்டுள்ளது. அதற்கான உட்பிரிவுகள் புல எண்.196/1ஏ, புல எண்.196/1பி, புல எண்.196/1சி, புல எண்.196/1டி. **அதற்கான புலவரைபடம் நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான "அ" பதிவேடு நகல் சா.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது. அதற்கான அடங்கல் நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(சா.சா.ஆ.1 முதல் 3 ஆவணம் அசலுடன் ஒப்பிட்டு பார்த்தபிறகு குறியீடு செய்யப்படுகிறது)**

மேற்படி 4 உட்பிரிவுகளும் தனிநபர்வசம்தான் உள்ளது. அதற்கான நபர்களின் பெயர்கள் அ பதிவேட்டில் உள்ளது.

**குறுக்குவிசாரணை (பிரதிவாதி)**

1. சா.சா.ஆ.2 ஆவணமானது 25.02.1986ம் ஆண்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

2. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு வந்த அழைப்பாணையில் எந்த காலத்திற்கான "அ" பதிவேடு என்று குறிப்பிட்டுவரவில்லை. சா.சா.ஆ.2 ஆவணமானது UDR க்கு பிற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். UDR க்கு முந்தைய ஆவணம் எங்கள் கைவசம் இல்லை. அதற்கு முந்தைய ஆவணங்கள் ஆவண காப்பகத்தில் இருக்கும்.

3. புல எண்.196/1க்கான உட்பிரிவு என் வசமுள்ள "அ" பதிவேட்டின் படி 1986ம் ஆண்டு உட்பிரிவானதாக துலங்குகிறது.

4. மேற்படி 4 உட்பிரிவுகளும் தனிநபர்வசம்தான் உள்ளது. அதற்கான நபர்களின் பெயர்கள் அ பதிவேட்டில் உள்ளது. புல எண்.196/1ஏ–க்கு 1628 என பட்டா வழங்கப்பட்டுள்ளது, புல எண்.196/1பி–க்கு 1968 பட்டா வழங்கப்பட்டுள்ளது, புல எண்.196/1சி–க்கு 1507 என பட்டா வழங்கப்பட்டுள்ளது, புல எண்.196/1டி–க்கு 919 என பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதை நான் சா.சா.ஆ.2 யை பார்த்து கூறுகிறேன்.

5. பொதுவாக தனிநபர் பெயருக்கு பட்டா வழங்கப்படும் என்றால் அவர் பெயரில் பதிவு பெற்ற ஆவணங்கள் இருந்தால் தான் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

6. மேற்படி நபர்கள் பதிவு ஆவணம் கொடுத்து பட்டா பெற்றார்களா என்று எனக்கு தெரியாது. பதிவு பெறாத ஆவணம் இல்லாத பட்சத்தில் பட்டாவின் அடிப்படையில் ஒரு நபர் உரிமை கோருவார் என்றால் சரிதான்.

7. 1986ம் ஆண்டுக்கு முன்பு மேற்படி புல எணகள் கோவிலுக்கு பாத்தியப்பட்ட புல எண்கள் என்றால் எனக்கு தெரியாது.

8. 1986ம் ஆண்டுக்கு முன்பு புல எண் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த ஆவணங்களின்படி வழக்கு புல எண் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.